ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
For Private Circulation Only

ECHOES INDIA

மே 2013 மலர் 6, இதழ் 3

# பூஜ்ய பாபூஜி மகராஜின்114வது பிறந்தநாள் விழா கொண்டாட்டங்கள்





அன்பிற்குரிய மாஸ்டர், அவருடைய முடிவில்லா அன்பை மறுபடியும் ஒருமுறை நம் மீது பொழிந்து, டைமண்ட் ஜூப்ளி பார்க், திருப்பூரில், சமீபத்தில் நிறைவடைந்த பூஜ்ய பாபூஜி மகராஜ் அவர்களின் 114வது பிறந்த நாள் விழாவில், மிஷனை மற்றும் ஒரு மைல்கல்லுக்குக் கொண்டு சென்றார்.

26ஆம் தேதி சகோ.கமலேஷ், திருப்பூர் வந்தடைந்தார். தயாராக இருந்த சில வளாகங்களை, அவர் திறந்து வைத்தார். காலை 6:30, காலை 11:30 மற்றும் மாலை 5:30 என, ஒரு நாளைக்கு மூன்று சத்சங்கங்கள், 29ஆம் தேதி வரை இருந்தன. 27, 28 ஆம் தேதிகளில், அனைத்து தன்னார்வத் தொண்டர்களுக்காகவும், இரவு 9மணிக்கு, சிறப்புச் சத்சங்கமும் நடைபெற்றது. மே-28, ஞாயிற்றுக்கிழமை அன்று, காலை சத்சங்கத்திற்குப் பிறகு, சகோ.கமலேஷ் ஐந்து திருமணங்கள் நடத்தி வைத்தார்.

26ஆம் தேதி முதல் வரத்துவங்கிய அப்யாசிகள், தொண்டர்களுடன் சேர்ந்து பணியாற்றினர். கூடாரங்கள், சமைக்குமிடம், உணவுக்கூடம், காவல், தண்ணீர் விநியோகம், துப்புரவு, உணவகம், குழந்தைகள் மையம், புத்தக விற்பனைக்கூடம் ஆகியவை, தயார் நிலையில் செயல்பட்டுக் கொண்டிருந்தன. தேவையிருக்குமிடங்களில் அப்யாசிகள் பங்கெடுத்துப் பணியாற்றினர்.தொண்டர்கள் இதய பூர்வமாக வேலை செய்வதாக ஒரு குழந்தை குறிப்பிட்டது.



நம்முடைய ஆன்மீக விழாக்கள், ஆன்மீக ஒளியின் நிகழ்வுகள். அவை நமக்கு, ஆன்மீகத்தின் பேராற்றலும் லௌகீகத்தின் எளிமையும் கொண்ட வாழ்க்கையை வாழக் கற்றுக் கொடுக்கின்றன. விழாவின் முதல் நாள், சகோ.கமலேஷ் தனது உரையில், இதை வலியுறுத்தினார். அவர், பாபூஜி மகராஜின், இரண்டு மென்குரல் அருட்செய்திகளை வாசித்து, மனிதகுலத்தின் மறுஉருவாக்கம் பற்றிய உயரிய திட்டத்தில், அப்யாசியின் பங்கு குறித்து எடுத்துரைத்தார். 29ம் தேதி யன்று, மறு நாள் மாஸ்டர் காணொளி ஒளிபரப்பு மூலம் அருட்செய்தி





வழங்கக்கூடும் என்று அறிவிக்கப்பட்டதும் அப்யாசிகளின் உற்சாகத்தைக் கண்கூடாகக் காண முடிந்தது. அப்போதிலிருந்து, மறுநாள் மாஸ்டர் தியானமண்டபத்திலுள்ள பெருந்திரையில் தோன்றும் நொடியை நோக்கி நேரம் நகர ஆரம்பித்தது. முடிவில், மணப்பாக்கம் பாபுஜி மெமோரியல் ஆசிரமத்தில் அவர் நுழைந்தவுடன், இதயங்கள் அன்பால் நிறைந்து, கண்கள் நிரம்பின. அது ஒரு அன்பும் நன்றியுணர்வும் நிறைந்த தருணமாக இருந்தது. தொடர்ந்த சத்சங்கமும், பாபூஜி மகாராஜரிடமிருந்து பின்னர் வந்த அருட்செய்தியும், மிஷனும், அப்யாசிகளும் தெய்வீகப் பராமரிப்பில் இருப்பதை நமக்கு நினைவூட்டியது. பாபுஜி தமது அருட்செய்தியில் "இதயம் முழுமையாகக் கடமைப்பட்டிருத்தலும் அத்துடன் தொடர்ச்சியான, இயல்பான, கடினத்தன்மையற்ற பயிற்சியும் ஆன்மீக இதயத்தை அதன் மிக்க மேன்மையான நோக்கத்திற்கு உயர்த்துகின்றது" என்று கூறியுள்ளார்.

28ம் தேதி நடைபெற்ற விவாகங்களுடன், சகோதரர் கமலேஷ் 29ம் தேதி நான்கு விவாகங்களையும், 30ம் தேதி மூன்று விவாகங்களையும், 1ம் தேதி நான்கு விவாகங்களையும் நடத்திக் கொடுத்தார். சகஜ மார்க்க முறையிலான இவ்விவாகங்கள் எளிமைக்கு உதாரணமாகவும், வெவ்வேறு கலாசாரம் மற்றும் மொழிகளைச் சார்ந்த குடும்பங்களை இணைப்பதாகவும் அமைந்துள்ளன.

33,000 அப்யாசிகள் மற்றும் சிறுவர்கள் இவ்வருட விழாவில் பங்கேற்றனர். இத்தனை பெரிதான ஒரு குடும்பம் மூன்று நாட்களுக்கு ஆனந்தமாக வசிக்க வழி செய்தவர்கள் யாரெனில் வளாகத்தில் உள்ள ஒரு அர்ப்பணிப்பு மிக்க அணியாகும். அவர்களது மாஸ்டர், நூற்றுக்கணக்கான மைல் தூரத்திலிருந்து அவர்களின் இதயங்களை தமது இதயத்தின் மூலம் இயக்கிக் கொண்டிருந்தார். சமையலறையில் 25,000 பேருக்கு ஒரு நாளுக்கு மூன்று தடவை சமைத்துத் துளிக்கூட வீணாகாமல் சமாளித்ததை ஒருவர் எப்படி விளக்க முடியும்? விழா வளாகத்தில் 23 காவல் மையங்களில் அப்யாசி சகோதரர்கள் மூன்று முறை மாற்றங்களில் இயங்கிக் கொண்டிருந்தனர். இருப்பிட வசதி வழங்கும் அணியிலுள்ள சகோதர சகோதரிகள், இரண்டு மாதங்களுக்கு முன்னர் பணியைத் தொடங்கியதுடன், அளவான வளத்தில் வசதியாக நம்மைத் தங்க வைத்தனர். சமையலறையிலும் உணவகத்திலும் ஈக்கள் இல்லாததைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. சுகாதாரக்கூடம், சுகாதாரம் மற்றும் இல்லப்பணி புரியும் அணிகள் ஒருங்கிணைந்து பணி புரிந்து நமது இருப்பை ஆரோக்கியமாகவும், வசதியாகவும் செய்தனர். நாம் வசதியாக இருக்கும் பொருட்டு அவர்கள் தூக்கமின்றி, கழிவுத்தொட்டிகளை சுத்தம் செய்யும் இயற்கை கலவைகளிடையேயும், பிரிக்கப்பட்ட கழிவுகளிடையேயும் தமது ஓய்வு நேரத்தை கழித்தனர். அவர்களது கடும் உழைப்பின் பலன் என்னவென்றால், 2012பண்டாராவின் போது மருத்துவக் கூடத்தில் 202 வயிற்றுப்போக்கு நிகழ்வுகள் பதிவாகியிருக்கையில், இவ்வருடம் 102 நிகழ்வுகள், அதுவும் பயணத்தில் ஏற்பட்ட வயிற்றுக்காய்ச்சலே தவிர ஒன்று கூட வளாகத்தில் ஏற்படவில்லை. இதற்கு மற்றுமொரு காரணம் குடிநீர் RO முறையில் சுத்திகரிக்கப்பட்டதாகும்.


















திருப்பூரில் நிலவிய கடும் வெப்பம் காரணமாக 6 லட்சம் லிட்டர்கள் RO முறையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரும், 24 இலட்ச லிட்டர்கள் தண்ணீரானது இதர உபயோகத்திற்க்காகவும் இந்த மூன்று நாட்களில் பயன்படுத்தப்பட்டது. அப்யாசிகளின் பயணத் தேவைக்காக wi-fi உதவியுடன் பன்னிரெண்டு வரிசைகளுடன் இயங்கிய பயணக் குழுவை ஒருவரும் பயன்படுத்த தவறியிருக்க மாட்டார்கள்.




பல்வேறு புதிய வெளியீடுகள் இந்த கொண்டாட்டங்களின்போது வெளியிடப்பட்டன. சில சிறப்பு வெளியீடுகள், சில புதிய புத்தகங்கள் மற்றும் காணொலிகள் மேலும் பல்வேறு மொழிகளில் வெளியிடப்பட்ட மறு பதிப்பீடுகள் அவற்றுள் குறிப்பிடத்தக்கன. அப்யாசிகள் தேர்ந்தெடுத்துக் கொள்ள அங்கு அதிகப்படியான வரிகைகளில் மிஷன் பதிப்புகள் வைக்கப்பட்டிருந்தன. இத்துடன் ஒரு புகைப்பட கண்காட்சியில் அழகிய முறையில் நேர்த்தியுடன் பொருத்தப்பட்ட நமது மாஸ்டர்களின் புகைப்படங்கள் இடம்பெற்றிருந்தன.




பெரியவர்கள் சத்சங்கம் மற்றும் இதர நிகழ்ச்சிகளில் பங்கு பெறும்போது குழந்தைகள் அவர்களின் வயதுக்கேற்ப ஏற்பாடு செய்யப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். 12 முதல் 17 வரையிலான குழந்தைகளுக்கு இதுவே முதன் முறையாக தனியாக ஏற்பாடு செய்யப்பட்ட நடவடிக்கைகளாகும். மேலும் அவர்கள் வளாகத்தின் அனைத்து துறைகளுக்கும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு பண்டாரா நடப்பதற்கு பின்புலமாக செய்யப்படும் பல்வேறு செயல்களைப் பற்றி உணர்த்தப்பட்டனர்.



சகோதரர் கமலேஷ் அவர்கள், மண்டலப் பொறுப்பாளர்கள், சில மையப் பொறுப்பாளர்கள் மற்றும் குறிப்பேட்டுக் குழுவினரைக் கொண்டு நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றினார். பல்வேறு தன்னார்வத் தொண்டர்கள் இந்நிகழ்ச்சியை தாங்கள் சந்தித்துக் கொள்வதற்கான ஒரு நல்ல வாய்ப்பாக எடுத்துக் கொண்டு அடுத்த சில மாதங்களுக்கு தாங்கள் செய்ய வேண்டிய செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினர்.



தன்னார்வத்தொண்டர்கள் இரவு பகலாகப் பணியாற்றியதையும், மற்றும் விழாவில் நடந்த அனைத்தையும் வார்த்தைகளால் விவரிக்க முடியாது. தெய்வீகத்தன்மையின் முகவர்களாக, மாஸ்டரின் எண்ணங்களை நிறைவேற்ற, அமைதியாக உழைத்தவர்களுக்கு சகோ. கம்லேஷ் நன்றி கூறினார். இவ்வாண்டு, மாஸ்டரின் பிறந்தநாள் விழா திருப்பூரில் நடைபெறும் என்று அதிகாரபூர்வமாக அறிவித்தது, மேலும் ஆனந்தத்தை அளித்தது. அந்த அன்புமயமான தருணத்தை நோக்கி மீண்டும் காலம் நடக்கத் தொடங்கியது.



## பிப்ரவரி 2013

மாஸ்டருக்கு வேலை அதிகமிருந்ததால் மிகவும் களைப்படைந்திருந்தார்.ஒவ்வொரு நாளும் அவர் மூன்று ப்ரிபெக்டு சிட்டிங்குகள் கொடுத்ததுடன், பல நாட்கள் சுற்றியிருந்த அப்யாசிகளுக்கும் சிட்டிங்குகள் கொடுத்தார். இதைத் தவிர அவர் தமது உடல் வலி குறையும் பொருட்டு பியெர் என்னும் ப்ரெஞ்சு அப்யாசியிடமிருந்து சிகிச்சை பெற்று வந்தார். இச்சிகிச்சை அவரது உடலை ஆசுவாசப்படுத்த உதவியது. இத்தனை வேலை மற்றும் உடல்நலக் குறைவுகளின் இடையே மாஸ்டர், ISTPயில் பங்கேற்கும் சுமார் 50பேர்களை காயத்ரிக்கு அழைத்திருந்தார்.

அவர் LMOIS பள்ளியின் பன்னிரண்டாவது வகுப்பு மாணவர்களையும் அங்கு அழைத்து எப்படி பாடங்களை உருப்போடாமல் கிரகித்துக் கொள்வது முக்கியம் என்பதைப் பற்றிப் பேசினார். மாணவர்கள் இதயத்தின் உதவியுடன் தேவையானவற்றை மதிப்பிட்டு கிரகித்துக்கொண்டு, தேவையற்றதை நிராகரிக்க வேண்டும். இதில் ஆசிரியர்களும் அவர்களுக்கு உதவ வேண்டும் என்று கூறினார்.

ஒரு அப்யாசி சுத்திகரிப்பு செய்யும் போது தனக்கு உடலில் மின்சாரம் பாய்ந்தது போன்ற உணர்வு ஏற்பட்டதையும் அதனால் தாம் பயமுற்றதைப் பற்றியும் கூறினார். மாஸ்டர், "இத்தகைய பயம் தேவையில்லாதது. எல்லோரும் ஒரு நாள் இறக்கப்போவது நிச்சயம். அப்படியிருக்க நாம் எதையும் பார்த்து பயப்படவேண்டிய அவசியம் என்ன?" என்று கூறினார்.

## மார்ச் 2013

மார்ச் மாதத் தொடக்கத்திலிருந்து மாஸ்டர் காயத்ரியில் தங்கி வந்தார். குடிலைப் புதுப்பிக்கும் வேலை முடிவுறும் நிலையில் இருந்தது. சகோ. கிருஷ்ணா வேலையைத் தவறாமல் மேற்பாற்வை செய்து கொண்டிருந்தார். ஒரு பெரிய அணி, குடிலைச் சுற்றியுள்ள தோட்டத்தை புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தது.

பெரும்பாலான மதியங்களில் மாஸ்டர், 'உபநிஷத் கங்கா'என்ற புதிய தொலைகாட்சித் தொடரின் அங்கங்களைப் பார்த்து வருகிறார். அவர் இந்நிகழ்ச்சியை மிகவும் ஆழ்ந்து ரசிக்கிறார். அது மிகவும் உயர்ந்த கருத்துகளைக் கொண்டதுடன் மிக சிறப்பாக இயக்கப்பட்டிருப்பதாகக் கருதினார். வியாழக்கிழமை மார்ச்14 அன்று, மாஸ்டருக்குக் காலில் கடுமையான வலியிருந்ததால், ஸ்கேன் செய்யும் பொருட்டு ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவருக்கு வலி குறைய மாத்திரைகள் கொடுக்கப்பட்டதுடன் இரண்டு-மூன்று நாட்களுக்காவது நடக்காமல் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்.



## புதுப்பிக்கப்பட்ட குடிலின் திறப்பு விழா

மார்ச்22ஆம் தேதி, வெள்ளிக்கிழமை, மாஸ்டர் காலை 8.20க்கு தியான மண்டபத்திற்கு வந்தார். பல அப்யாசிகள் தங்கள் இருக்கைகளில் அப்போது தான் அமர்ந்து கொண்டிருந்தபடியால் மாஸ்டர் பொறுமையாக சுமார் 15 நிமிடம் காத்திருந்து, பின்னர் ஐம்பது நிமிடங்களுக்கு ஒரு சிட்டிங் வழங்கினார். ஒரு நிச்சயதார்த்தத்தை நடத்தி கொடுத்த பின்னர் மாஸ்டர் மூன்று புதிய புத்தகங்களை வெளியிட்டார். பிறகு குடிலுக்குச் சென்ற மாஸ்டர் நுழைகையில்"நான் குடிலை விட்டு வெளியேறி ஆறு மாதங்களாகின்றன" என்று கூறினார். கூடத்தின் நடுவில் நாடாவை வெட்டி விளக்கை ஏற்றினார்.தம்முடைய படுக்கையறையில் பிரசாதம் சமர்ப்பித்து அங்கிருந்த எல்லோருக்கும் வினியோகித்தார். ஒரு சகோதரி அன்று அவருக்கு முப்பதாவது பிறந்த நாளென்றும், தான் மிக வயது முதிர்ந்தவராக உணர்வதாகவும் கூறினார். மாஸ்டர் "நான் உங்களை விட மூன்றளவு வயதானவன். ஆயினும் இன்னும் இளமையாக உணர்கிறேன்.வயது அதிகமாக ஞானம் வருகிறது. நான் வயதானவனாக உணரவில்லை, என் உடல் தான் வயதானதாகும்." என்று கூறினார். USA யிலிருந்து வந்திருந்த இன்னொரு அப்யாசி, "மாஸ்டர், நான் பௌதீகப்பிரிவை எப்படி சகித்துக் கொள்வது" என்று வினவ மாஸ்டர் "நீங்கள் எப்போது தனியாக இருந்தாலும் உங்கள் முன்னே மாஸ்டர் அமர்ந்திருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார். அந்த அப்யாசி "என்னால் அப்படி நினைத்துக் கொள்ள முடியும். ஆனால் அது உண்மையோ என்று சந்தேகம் கொள்கிறேன்" என்று கூறினார். மாஸ்டர் "மேற்கத்திய அப்யாசிகளிடம் இது தான் பிரச்சினை. சந்தேகம் அறிவாற்றலிருந்து வருகிறது. விஞ்ஞானி அணு இருக்கிறது என்று கூறினால் நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள். அதில் நீங்கள் ஏன் சந்தேகம் கொள்வதில்லை? நீங்கள் எப்பொழுதாவது அணுவைப் பார்த்திருக்கிறீர்களா?" இது தான் விஞ்ஞானத்திற்கும் ஆன்மீகத்திற்கும் உள்ள வேறுபாடு - நாம் விஞ்ஞானம் சொல்வதை நம்புகிறோம். ஆனால் ஆன்மீகத்தை நம்ப மறுக்கிறோம்." என்று கூறினார்.

## அஷ்டாங்க யோகமும் சகஜ மார்க்கமும்

மார்ச் 27ம் தேதி, புதன்கிழமை, ஹோலி பண்டிகையன்று மாஸ்டர் களைப்பாக இருந்த போதிலும் உற்சாகமாக பல அப்யாசிகளை சந்தித்தார்.அன்று பார்கவ்வினுடைய பிறந்தநாளானபடியால் மாஸ்டரின் குடும்பத்தினர் காலை எட்டு மணியளவில் அங்கு வந்தனர். மாஸ்டர் பிரசாதம் சமர்ப்பித்து தமது அலுவலகத்தில் சத்சங்கம் நடத்தினார். மதியம் மாஸ்டர் 'உபநிஷத் கங்கா' என்ற தொலைகாட்சித் தொடரின் இரண்டு அங்கங்களை பார்த்தார். பின்னர் சகஜ மார்க்கம் எப்படி யோகத்தின் எட்டு பாரம்பரிய அங்கங்களிலிருந்து பரிணாம வளர்ச்சி அடைந்தது



என்பதைப் பற்றி ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது.

*"யமம் மற்றும் நியமம் ஆகியவற்றை வீட்டிலுள்ள பெற்றோர் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் வழியாக கற்க வேண்டும். ஆசனம் மற்றும் பிரணாயாமம் ஆகியவற்றிற்கு, நாம் தியானத்திலிருக்கும் போது மூச்சு இயற்கையாகவே சீராகி விடுகிறது (அதனால் அவற்றிற்கு அவசியமில்லை). ஒருவர் ஆழ்ந்த தியானத்திலிருக்கும் போது சில நேரங்களில் மூச்சு 2-3 நிமிடங்களுக்கு நின்று விடுகிறது. அதனால் ஒருவர் அவராகவே முயற்சியெடுத்து மூச்சை நிறுத்துவது தேவையற்றதாகி விடுகிறது. நாம் செய்யும் தியானம், சமாதி நிலை என்பது யோக முறைகளில் சொல்லியது போல ஒரு கல் (ஜடம்) போன்ற நிலையில்லாமல் ஆரம்பித்தில் உள்ள ஒரு உள்ளுணர்வு நிலையாக உள்ளது. ஆரம்பம் என்பது எல்லாவற்றிற்கும் ஆரம்பமாக உள்ளதைத்தான் சகஜ மார்க்கம் போதிக்கிறது, அதைத்தான் நீங்கள் ஆழ்ந்த தியான நிலையில் உணர்கிறீர்கள். இன்றைய காலை தியானத்தில், இங்கு இல்லாததைபோன்ற ஒரு உணர்வு எனக்கு உடனடியாக ஏற்பட்டது. நான் தியானம் ஆரம்பியுங்கள் என்று சொன்னவுடன் நான் அங்கு இல்லை. நான் கூறியபடி, இப்போது எனக்கு மஹா சமாதியின் அர்த்தம் பற்றி புரிகிறது, ஏனென்றால், தியானத்தின் போது, நீங்கள் திரும்பி வராத இடத்திற்கு சென்று விடுகிறிர்கள். போக, போக, திரும்பி வர கடினமாகி விடுகிறது. சில நேரங்களில் நான் சிட்டிங் ஆரம்பித்தவுடன், ஒரு மணி நேரம் கழிந்த பின்னரும் ஒரு சில நொடிகளே ஆனது போல இருக்கும். இரண்டு அல்லது மூன்று முறை, எனக்கு தியானம் ஆரம்பியுங்கள் என்று சொல்ல வேண்டுமா அல்லது தட்ஸ் ஆல் (தியானம் முடிந்தது) என்று சொல்ல வேண்டுமா என சந்தேகமே வந்து விட்டது, பின்னர், கண்ணைத்திறந்து பார்த்து, எல்லோரும் தியானத்திலிருந்ததால், தட்ஸ் ஆல் (தியானம் முடிந்தது) என கூறினேன்." என்று மாஸ்டர் கூறினார்.*

புதுப்பிக்கப்பட்ட காட்டேஜில் முதல் வாரத்தில், மாஸ்டர் டைனிங் ஹால் சென்று உணவருந்துவதை முயற்சித்துவிட்டு பின்னர் அவரது அறையிலேயே உணவருந்தினார். அவருக்கு நடக்கும் போது, திரும்பும் சமயங்களில் கால் வலிப்பதுடன், முழங்கால் முட்டுகளில் அதிக வலியும் இருக்கிறது.

## அப்யாசிகளின் பலதரப்பட்ட அனுபவங்கள்

புனேயிலிருந்து வந்திருந்த ஒரு சகோதரி மற்றும் அவரது கால்நடை அறுவை மருத்துவம் பயிலும் மகள் இருவரும் மாஸ்டரைப் பார்க்க வந்திருந்தபோது மாஸ்டர் அவர்களிடம் மிகுந்த ஆர்வத்துடன் படிப்பைப்பற்றியும், அவள் செய்த அறுவை சிகிச்சைகளைப்பற்றியும் கேட்டறிந்தார்.

மாஸ்டரிடம் ஜபல்பூர் மற்றும் குன்ச் பசோடா மையங்களைச் சேர்ந்த அப்யாசிகள் சந்திக்க ஆர்வமாக உள்ளதை தெரிவிக்கப்பட்டபோது, அவர் ஜபல்பூர் தனது மையம் என கூறி, மாலை 5 மணிக்கு வரச்சொன்னார். அவர்கள் வருவதற்கு முன்னரே, மாஸ்டர் தயாராகி விட்டதினால், தொண்டர்கள் அவரது நாற்காலியை அவசரமாக கொண்டு வர வேண்டியிருந்தது. மாஸ்டரின் சத்சங்கம் முடிந்தவுடன், அவரை சந்திக்க ஒரு பெரிய கூட்டம் கூடியது. அந்த கூட்டம் கட்டுக்கோப்பாக இல்லாததினால், மாஸ்டரை முகஞ்சுளிக்க வைத்தது. சிற்றுண்டிகளுக்குப் பின்னர், மாஸ்டரின் பாதங்களை தொடவேண்டாம் எனப் பலமுறை எடுத்துக்கூறப்பட்டும், எல்லா அப்யாசிகளும் அதையே செய்ய முயற்ச்சித்தனர். இந்த நிகழ்வுகளிலிருந்து, நாமெல்லாரும் கற்றுக்கொள்ள வேண்டியது, மாஸ்டரின் முன்னிலையில் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் மற்றும் அதற்காக நாம் எம்மாதிரியான மாற்றங்களை நமக்குள் கொண்டு வரவேண்டும் என்பதும் தான்.

## ஞாயிறு, மார்ச், 31, 2013

வருடத்தின் கணக்கு முடிப்பதற்கான கடைசி நாளானதினால், மாஸ்டர் மும்முரமாக அதில் ஈடுபட்டு இருந்தார். கணக்காளர்களின் சந்திப்பு சுமார், மூன்று மணி நேரம் நீடித்தது. மாஸ்டர் மதிய உணவிற்க்குப் பின்னர், காயத்ரிக்கு கிளம்பிச் சென்றார். காட்டேஜில் சில வேலைகள் முடிக்கப்பட வேண்டியிருந்ததால் அவர் அங்கே தங்கினார். அவரது பேத்தி மாதுரி சென்னை வந்திருந்ததினால், அவளுடன் சற்று நேரம் செலவிட்டார். பல வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாலும், ஒரு சமச் சீரான வாழ்க்கையை எப்படி வாழ்வது மற்றும் குடும்பத்தினரின் மேலான அவரது கவனம் ஆகியவை நாம் அனைவரும் பின்பற்ற வேண்டிய ஒரு உதாரணமாகும்.

## ஏப்ரல் 2013

காயத்ரியிலிருந்த போது, அரசியல்வாதிகள் தங்களின் சுயநலத்திற்காக அதிகாரங்களை பயன்படுத்துவதைப் பற்றிய பேச்சு வந்தது. மாஸ்டர் சில சமீபத்திய நிகழ்வுகளை கேட்டு வேதனைப்பட்டார். உயர் பதவியில் இருப்பவர்களின் லஞ்ச ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களைக் கண்டு மனவருத்தப்பட்டதுடன், அந்தப் போக்கு நாளுக்கு நாள் அதிகரித்துவருவதையும் சுட்டிக்காட்டினார்.

ஒரு நாள் செரோகியைச் சேர்ந்த (அமெரிக்க இந்திய) சகோதரி, தனது 3 சிட்டிங்குகளை முடித்துக் கொண்டு, மாஸ்டரைப் பார்க்க வந்திருந்தார். அவர் தான் முதல் அமெரிக்க இந்திய அப்யாசி என்று கூறிய மாஸ்டர், அவரை அருகில் அழைத்துக் கண்களை உற்றுப் பார்த்தார். தன் பெயர் காயத்ரி என்று கூறியவுடன், மாஸ்டர், "கிருஷ்ணாவின் ஐந்து வயதில் இந்த வீடு கட்டப்பட்டது. சகஜ மார்க்கத்தில் சேர்வதற்கு முன்னால், காயத்ரி மந்திரம் பயிற்சி செய்து கொண்டு இருந்ததால்

'காயத்ரி' என வீட்டிற்குப் பெயரிட்டோம்" என்றார். அவளது உண்மையான இந்தியப் பெயரைக் கேட்டபோது, சிறு வயதில் தான் 'சிறிய மான்' என்று அழைக்கப்பட்டதாகக் கூறினாள். அனைவருக்கும் அவளை அறிமுகப்படுத்தி மகிழ்வுறச்செய்தார்.

அமெரிக்காவில் இருக்கும் தங்கள் மகன் இங்கு வர விரும்பவில்லை என்றும், அதனால் அவர்கள் அங்கு செல்லவிருப்பதாகவும் ஒரு வயதான தம்பதியினர் கூறிய போது, வருத்தமடைந்த மாஸ்டர், தனக்கு இதில் ஒப்புதல் இல்லை என்றார். இது தனது அறிவுரை என்றும், அவர்கள் தங்கள் விருப்பப்படி முடிவெடுக்கலாம் என்றும் கூறினார். இவ்வாறு மாஸ்டர் நேரடியாக அறிவுரை கூறுவது அரிதாகும்.

இந்த வாரம், தனது பேத்தி மாதுரியை கடைக்கு அழைத்துச் சென்று பரிசுகள் வாங்கி அளித்தார். அது பார்க்க சுவாரசியமாக இருந்தது. பொருட்களின் விலைச் சீட்டுக்களைப் பத்திரப்படுத்திக் கொண்டார். குடும்பத்தினருக்கும் பரிசுகள் வாங்கி, அன்பான ஆசியுடன் வழங்கினார். அவர் செய்யும் ஒவ்வொன்றிலும், முழுமையான கவனம், அன்பு மற்றும் மென்மை காணப்படுகிறது. ஏப்ரல்12, வெள்ளிக்கிழமை, மாதுரி லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றபின்னர், மாஸ்டர் மணப்பாக்கத்தில் உள்ள காட்டேஜுக்கு வந்தார். அவரது வலது காலிலும், வலது கையிலும், இடைவிடாத வலி இருந்து கொண்டே இருக்கிறது. MRI ஸ்கேன்எடுப்பதற்காக, ஏப்ரல் 17 புதன்கிழமை, மணப்பாக்கத்தில் உள்ள MIOT மருத்துவமனைக்கு மாஸ்டர் சென்றார். சில காலத்திற்கு, கதிர்வீச்சு சிகிச்சை செய்ய வேண்டியதாகிய நிலைமையை அது வெளிப்படுத்தியது. அனைவரையும் கவலை சூழ்ந்தது. ஆனால், ஏப்ரல் 20, ஞாயிற்றுக்கிழமை, சத்சங்கம் நடத்த, தியான மண்டபத்திற்கு மாஸ்டர் வருகை புரிந்து, அனைவரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கினார். பின்பு, சகோ.சக்ரபாணி தமிழில் உரையாடியதைக் கேட்டார், அவரது தினசரி அலுவல்களான, ஆன்மீகப் பணி அல்லது நிர்வாகப்பணி ஆகியவற்றைக் கவனிக்க, அவரது சுகமின்மை அவருக்குத் தடையாக இருப்பதில்லை. வலியும், அசௌகரியமும் உள்ள போதும், மாஸ்டர் எல்லாவற்றையும் புன்னகையுடன் எதிர் கொண்டு, எப்பொழுதும் போல் பிரகாசமாக இருக்கிறார். உடல் பிரச்சனையை CT ஸ்கேன் மறு உறுதி செய்துள்ளது. இந்த உடல் நலப் பின்னடைவு விரைவில் கடந்து, நம் அன்புக்குரிய மாஸ்டர் தனது பலத்தையும், நல்ல ஆரோக்கியத்தையும் பெற நாம் அனைவரும் ஒன்று கூடிப் பிரார்த்திப்போம்.

## முத்நூரில் புதிய மையம், வடக்கு கர்நாடகா

வடக்கு கர்நாடகாவில் உள்ள, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, நீர் வளம் நிறைந்த, முத்நூர் என்னுமிடத்தில், ஒரு புதிய மையம் துவங்கப்பட்டது. ஒரு அப்யாசியின் இல்லத்தில் நடைபெறும் ஞாயிறு சத்சங்கத்தில், சுமார் 15 அப்யாசிகள், முறையாகப் பங்கேற்கின்றனர். அருகில் உள்ள இடங்களிலிருந்து, பிரிபெக்டுக்கள் வந்து, தனி சிட்டிங்குகள் வழங்குகின்றனர்.

மார்ச் 31ம் தேதி, முத்நூர் கிராமத்தில் உள்ள ஒரு பள்ளி வளாகத்தில், அப்யாசி பயிற்சி நிகழ்ச்சி (ATP) ஒன்று நடைபெற்றது.அருகில் உள்ள இடங்களிலிருந்து வந்திருந்த சுமார் 60 அப்யாசிகள், இதில் பங்கேற்றனர். காலை, மாலை சத்சங்கங்களைத் தவிர, பயிற்சியின் அடிப்படை அம்சங்கள் விவரமாகக் கூறப்பட்டன. இதைத் தொடர்ந்து, ஒரு வினா-விடை நிகழ்ச்சி நடைபெற்றது.

மாலை சத்சங்கத்திற்குப்பின் நடந்த ஒரு ரவற்புக்கூட்டத்தில், சுமார் 15 ஆன்மீக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வில், Dr, கஜேந்திரசிங், சகோதரி மீனா குல்கர்னி, மற்றும் சகோ. ராஜு கஷாம்பூர்கர் ஆகியோர் உரையாற்றினர். நிகழ்ச்சி நன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், சிலர் அறிமுக சிட்டிங் எடுத்துக்கொள்ளவும், தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர்.

## தியான மண்டபத் துவக்க விழா, அஹமத்நகர்

2013, மார்ச் 31ம் தேதி, மண்டபப் பொறுப்பாளர் சகோ. அருண் குமார் சௌஹான், தியான மண்டபத்தைத் திறந்துவைத்தார். அருகில் உள்ள மாவட்டங்களிலிருந்து அப்யாசிகள் வந்து, பங்கேற்று, மகிழ்வான சூழலை உருவாக்கினர். சகோ.கான்தேஷி என்பவரால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள இத்தியான மண்டபத்தில், சுமார் 100 அப்யாசிகள் அமரலாம்.மையத்தின் பல்வேறு செயல்பாடுகள் மேலும் சிறப்பாக நடைபெற இம்மண்டபம் உதவியாக இருக்கும்.

காலை சத்சங்கத்திற்குப்பின், பஜனையுடன் விழா ஆரம்பமானது. அதையடுத்து, மிக விரைவாக ஆன்மீக முன்னேற்றம் அடைய, நமது பயிற்சியில், பக்தியின் பங்கு என்ன என்பதை விளக்கும், 'பக்தி' என்ற நாடகம் நடைபெற்றது. அதன் பின் நடந்த வரவேற்புக் கூட்டத்தில், வாழ்க்கையில் சமன் நிலையின் தேவை மற்றும் சகஜ மார்க்கம் பற்றி அறிவுறுத்தப்பட்டது. சகோதரி கீதாஞ்சலி கலே, புதிய நூலகத்தைத் திறந்து வைத்தார். மதிய உணவிற்குப்பின், 'கொடுத்தல்' என்ற நன்னெறியைப் பற்றிய நாடகம் ஒன்று இருந்தது. மாலை சத்சங்கத்துடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.





## அகில இந்திய கட்டுரை எழுதும் நிகழ்ச்சி



இந்நிகழ்ச்சி, UNIC மற்றும் SRCM தொடர்ச்சியாக இணைந்து நடத்தும் ஒரு கூட்டு நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சி, நாடு முழுவதும், ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு 9,798 கல்வி நிறுவனங்களிலிருந்து 1,70,148 மாணவர்கள் பங்கேற்றனர். குர்காவ்விலுள்ள மண்டல ஆசிரமத்தில், தேசிய அளவில் பரிசு வழங்கும் நிகழ்ச்சி, 24 பிப்ரவரி அன்று நடந்தது. UNIC-இந்தியா மற்றும் பூடான் இயக்குனர்,குமாரி கிரண் மெஹ்ரா-கெர்பெல்மேன், சிறப்பு விருந்தினராக இருந்தார். அகில இந்திய வெற்றியாளர்கள்-விவியன் ஆன்ட்ரூஸ் மற்றும் சத்யார்த் ஷர்மா, கட்டுரை எழுதியது, மதிப்பு மிக்க ஆழ்ந்த அறிவைத் தங்களிடம் ஏற்படுத்தியுள்ளதைப் பற்றிக் கூறி, பார்வையாளர்களை ஈர்த்தனர்.




மண்டல மற்றும் நிறுவன அளவில் பரிசு வழங்கும் நிகழ்ச்சி, இந்தியா முழுதும், மிகுந்த உற்சாகத்துடன் நடத்தப்பட்டது. அது, சகஜ மார்க்கத்தை சமூகத்திற்கு அறிமுகப்படுத்தும் ஒரு வரவேற்புக் கூட்டமாகவும் அமைந்தது.



ஒரிசா-புவனேஸ்வரில், வெற்றியாளர்களின் பெற்றோர்கள், நிகழ்ச்சியின் தனித்தன்மையையும், தங்களுக்கு மையத்தில் அளிக்கப்பட்ட அன்பையும் புகழ்ந்தனர். மஹாராஷ்ட்ரா - சந்த்ராபூரில், முன்னாள் மாநில நிதியமைச்சர், திரு.சாந்தாராம்ஜி பொட்துகே, முதன்மை விருந்தினராக இருந்தார். வாழ்க்கையில், ஆன்மீகப் பயிற்சியின் பங்கு குறித்து, மண்டல பொறுப்பாளர், சகோ.ராஜேந்திரன் உரையாற்றினார். ஜார்கண்ட்-ராஞ்சியில், புகழ்பெற்ற எலும்பியல் மருத்துவர், Dr.அனில் Kr பாண்டே முதன்மை விருந்தினராக இருந்தார். மையப் பொறுப்பாளர், அரங்கத்தினருக்கு சகஜ மார்க்கத்தை அறிமுகப்படுத்தினார். ஹைதராபாத்-தும்குன்டா மண்டல ஆசிரமத்தில், BITS - பிலானியின், சர்வதேச நிகழ்ச்சிகள் பிரிவின் தலைவர், திருமதி.சுமன் கபூர், தேசிய மற்றும் மண்டல அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு, பதக்கங்களையும், சான்றிதழ்களையும் வழங்கினார். ஆ.பி - கம்மம் ஆசிரமத்தில், திரு. C.H. வெங்கட் ரெட்டி, DEO முதன்மை விருந்தினராக இருந்தார். அங்கு, நன்னெறி அடிப்படையிலான கல்வியின் தேவை குறித்து உரையாற்றினார்கள். ஆ.பி - விஜயவாடாவில், மையப் பொறுப்பாளர், வாழ்க்கையில் ஆன்மீகத்தின் தேவை பற்றி வலியுறுத்திப் பேசினார். தமிழ்நாடு - தேவகோட்டையில், மண்டல அள்வில் வெற்றி பெற்ற M.பவித்ராவைப் பாராட்டி, ஒரு பள்ளியில், சிறிய நிகழ்ச்சி நடத்தப்பட்டது. குஜராத் - மெஹ்சனாவில், பள்ளி மற்றும் கல்லூரி அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு, இரண்டு தனி விழாக்கள் நடத்தப்பட்டு, அரங்கத்தினருக்கு, சகஜ மார்க்கம் அறிமுகப்படுத்தப்பட்டது.




ராஜஸ்தானில், மண்டல அளவிலான விழா, அல்வர் ஆசிரமத்திலும், ராஜ்கரிலும் நடந்தது. அல்வர் ஆசிரமத்தில், சென்ட்ரல் அகாடமி சீனியர் ஹையர் செகன்டரி பள்ளியின் முதல்வர், திருமதி.அஞ்சனா சஹாய் முதன்மை விருந்தினராக இருந்தார். மாவட்ட கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (DIET) முதல்வர், திரு.விஷ்ணு சுவாமி சிறப்பு விருந்தினராக இருந்தார். கேரளா - பையனூரில், ஸ்ரீ சங்கராச்சார்யா சம்ஸ்கிருத பல்கலைக்கழகத்தின் இணை பேராசிரியர், Dr. A.K. சுதர்மா, தலைமை வகித்து, வெற்றியாளர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.



## பயிற்சியின் அடிப்படை விஷயங்கள் குறித்து பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சிகள்

'Grounding in the Practice' (GITP) பயிற்சியின் அடிப்படை விஷயங்கள் குறித்து பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சி இந்தியாவில் சில மையங்களில் இதற்கென பயிற்றுவிக்கப்பட்ட ஆர்வம் மிக்க உதவியாளர்களால் நடத்தப்பட்டது. ஜி.ஐ.டி.பி.ல் நாட்குறிப்பு எழுதுதல், தியானம், சுத்திகரிப்பு மற்றும் பிரார்த்தனை ஆகிய நான்கு பாடத்திட்டங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் முழு நேர நிகழ்ச்சியாக நடத்தப்பட வேண்டும். இப்பயிற்சியில் சிறு சிறு குழுக்களாக செயல்படுதல், உள்ளாய்வு செய்தல், மாஸ்டர்களை மேற்கோள் காட்டுதல், மென்குரல்களில் உள்ள செய்திகள் ஆகியவற்றின் மூலம் சாதனாவின் தரத்தினை மேம்பாடு அடையச்செய்வதில் கவனம் செலுத்தப்படுகிறது.



இந்நிகழ்ச்சிகள் உ.பி.யில் பாபுஜி நினைவு ஆசிரமம் BMA, லக்னௌ, கான்பூர் மற்றும் மெயின்பூரியில் நடத்தப்பட்டன. அலகாபாத்தில் இருந்து வந்த உதவியாளர் குழுவினர் ஃபதேபூர் மற்றும் ப்ரதாப்கர் மையங்களில் மூன்று நாள் நிகழ்ச்சியினை நடத்தினர். ஒடிசாவில், பரோடாவில் இருந்து வந்த உதவியாளர்களால் நடத்தப்பட்ட மூன்று நாள் நிகழ்ச்சியில் இருபது அப்யாசிகள் கலந்து கொண்டனர்.



ஹதராபாத் மண்டல ஆசிரமத்தில் கோதாவரி கானி, ஸ்ரீராம்புர், வாரங்கல், போன்கிர், பெல்லம்பள்ளி, ஞான்புர், அஷ்வபுர் மற்றும் ஹைதராபாத் அப்யாசிகளுக்காக, இது இரண்டு பகுதிகளாக, ஒவ்வொன்றும் மூன்று நாட்களுக்கு, தெலுங்கில் நடத்தப்பட்டது. ஹைதராபாத் டோமல்குடா ஆசிரமத்தில், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் தெலுங்கில் முழு நாள் நிகழ்ச்சியாக நடைபெற்றது. விஜயவாடா (ஆ.பி.)-ல் அருகாமையில் உள்ள மையங்களில் உள்ள 100 அப்யாசிகளுக்காக நான்கு பகுதிகளாக ஒவ்வொன்றும் நான்கு நாட்கள் நிகழ்ச்சியாக நடைபெற்றது.



கொல்கத்தாவில் இருந்து வந்த உதவியாளர்கள் குழுவினர் சிலிகுரி மற்றும் பன்டெல் ஒவ்வொன்றிலும் இரண்டு நாள் நிகழ்ச்சி நடத்தினர். இதேபோன்ற நிகழ்ச்சி ஏப்ரல் மற்றும் ஜுன் மாதங்களுக்கு இடையில் ராணிகன்ஜ் மற்றும் காங்டாக் ஆகிய இடங்களில் நடத்தப்பட உள்ளது.



குஜராத், ராஜஸ்தான், மஹாராஷ்ட்ரா மற்றும் மத்தியபிரதேசத்தில் உள்ள எட்டு மண்டலங்களின் அப்யாசிகளுக்காக, குஜராத்தின், அகமதாபாத் அடலாஜ் யோகாசிரமத்தில் GITP நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. குஜராத்தின், வதோதரா மற்றும் வல்சத் ஆசிரமங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு நாள் நிகழ்ச்சியாக பலபகுதிகள் நடத்தப்பட்டன.



தமிழ் நாட்டின் பல இடங்களில் இருந்து வந்த11 உதவியாளர்கள், உடுமலைப்பேட்டை ஆசிரமத்தில் 70அப்யாசிகளுக்கு, தொடர்ந்து 2 ஞயிற்றுக்கிழமைகளில், நாட்குறிப்பு எழுதுதல் பற்றி பயிற்சி நிகழ்ச்சி நடத்தினர். மத்தியப்பிரதேசத்தில், உஜ்ஜெய்ன், விதிஷா மற்றும் இந்தூர் மையங்களையும் சேர்த்து, ஜனவரி முதல் மார்ச் வரையில் 10 GITP நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பயிற்சி நிகழ்ச்சிகள், நெறிமுறைகளின் படி நடத்தப்பட்டு அப்யாசிகளால் நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்டன. இது, எதிர்காலத்தில் இத்தகைய நிகழ்ச்சிகளை அதிக அளவில் நடத்த ஊக்கமளிக்கிறது.



**பயிலரங்கம், பாலி, ராஜஸ்தான்**

2013, மார்ச் 23, 24ம் தேதிகளில் பாலி மாவட்டத்தில் 2 நாள் பயிலரங்கம் ஒன்று நடந்தது. அதில்,7 ஊர்களிலிருந்து வந்திருந்த சுமார் 115 அப்யாசிகள் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சி, பயிற்சி மற்றும் அது பற்றிய கேள்விகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. காலை சத்சங்கத்திற்குப்பின், மாஸ்டரைப் பற்றிய ஒளி-ஒலிக்காட்சி காண்பிக்கப்பட்டது. 'இலட்சியம்' என்ற தலைப்பின் மீதான கருத்துரைகளும், அது சம்பந்தமான விளையாட்டுக்களும் இருந்தன. அப்யாசிகள் தங்கள் பயிற்சியிலுள்ள பிரச்சினைகளைப் பகிர்ந்துகொண்ட குழு செயல்பாடுகள் இருந்தன. இந்நிகழ்ச்சி மாலை சத்சங்கத்துடன் நிறைவுற்றது.

இரண்டாம் நாள், மாஸ்டரைப் பற்றியதோர் ஒளி-ஒலிக்காட்சி, அவர் ஆற்றிய உரைகள் மற்றும் பத்து நியமங்கள் மீதான ஒரு கலந்துரையாடல் ஆகியவை இருந்தன. பஜனைகள் மற்றும் புல்லாங்குழல் நிகழ்ச்சியும் இருந்தன. தினசரி வாழ்வில் மாஸ்டரை சார்ந்திருத்தல் என்பது குறித்த பல கேள்விகளுக்கு பிரிசெப்டர்கள் பதிலளித்து தெளிவுபடுத்தினர். மாலை சத்சங்கத்துடன் அன்றைய தினம் நிறைவுற்றது.

**முழுநாள் நிகழ்ச்சி, பம்மரு, ஆந்திரப் பிரதேசம்**

பம்மரு, கிருஷ்ணா மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில், விஜயவாடாவிலிருந்து 30 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு கிராமம் ஆகும். 2009-ம் ஆண்டு இரண்டே அப்யாசிகளுடன் தொடங்கப்பட்ட இம்மையம், வேகமாக வளர்ந்து இப்போது 120 அப்யாசிகளைக் கொண்டுள்ளது. இம்மையத்தின் அப்யாசிகள் விஜயவாடா மையத்தின் உதவியுடன், மார்ச் 31அன்று ஒரு முழுநாள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர். சுமார் 180 அப்யாசிகள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். விஜயவாடா மையப் பொறுப்பாளர் சகோ. கே. வி. சுப்பா ராவ் தமது தொடக்கவுரையில், நம் மாஸ்டர் கொடுக்கும் வெள்ளிக்கிழமை சிட்டிங் உட்பட, தீவிரப் பயிற்சியின் அவசியத்தை எடுத்துக் கூறினார். இது, பிரிசெப்டர் இல்லாத மையங்களில் எவ்வாறு உதவி புரிகிறது என்று விவரித்தார். எதிர்வரும் ஏப்ரல் பண்டாராவைப் பற்றிய பல குறிப்புகள் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன.



**சகோதரிகளின் நிகழ்ச்சி, ராய்ப்பூர், சத்திஸ்கர்**

ராய்ப்பூர் ஆசிரமத்தில், ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சி சகோதரிகளால் நடத்தப்படுகிறது. அவர்கள், மார்ச் 31-ம் தேதி, 'மனிதனின் பரிணாம வளர்ச்சியில் மாஸ்டரின் பங்கு' என்ற புத்தகத்தில் உள்ள 'கீழ்ப்படிதல்' என்ற தலைப்பில், ஒரு குழு கலந்துரையாடலை நடத்தினர். இந்நிகழ்ச்சி, தலைப்பின் பொருள் மற்றும் மாஸ்டரிடம் கீழ்ப்படிதலை எவ்வாறு பழக்கப்படுத்துவது போன்ற கேள்விகளைப் பற்றி அகத்தாய்வு செய்யும்படியாக வடிவமைக்கப்பட்டிருந்தது. அக் கேள்விகள் குறித்து கலந்துரையாட, அப்யாசிகள் குழுக்களாக பிரிக்கப்பட்டனர். இந்த கலந்துரையாடல்களிலிருந்து, ஆன்மீகத்தில் முன்னேற கீழ்ப்படிதல் இன்றியமையாதது என்றும், ஒருவர் கீழ்ப்படிபவராக ஆவதற்கு பத்து நியமங்களை கடைபிடிக்க வேண்டும் என்றும் தெளிவாக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி, அப்யாசிகளின் ஊக்கத்தை புதுப்பித்தது.

**முழுநாள் நிகழ்ச்சி, பில்வாரா, இராஜஸ்தான்**

மார்ச் 3அன்று, பில்வாராவில் நடைபெற்ற நிகழ்ச்சி, 132 அப்யாசிகள் கலந்துகொண்ட ஒரு சத்சங்கத்துடன் தொடங்கியது. ஷாஜஹான்பூரில் நடந்த ஹிந்தி பயிற்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஒரு சகோதரி, தனது அனுபவத்தை பகிர்ந்துகொண்டார்.

'பண்டாரா' என்பதுதான் தலைப்பு. இளைஞர்கள் ஒரு குறு நாடகத்தை நடத்தினர்; அது, வாழ்க்கை என்பது வாய்ப்புகளின் சங்கிலித் தொடர் என்றும், அவற்றிலிருந்து சரியானவற்றைத் தேர்ந்தெடுப்பதே முக்கியம் என்றும் எடுத்துக்காட்டியது. ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியில் அப்யாசிகள் பண்டாராவைக் குறித்து தாங்கள் புரிந்துகொண்டிருந்ததைப் பற்றி பேசினர். அவை, தனிச்சிறப்பு வாய்ந்த அருள் நிறைந்த நாட்களாகும் என்றும், அதில் கலந்துகொள்பவர்கள் அன்பையும் சகோதரத்துவத்தையும் வளர்த்துக்கொள்ளும் ஒரு வாய்ப்பைப் பெறுகிறார்கள் என்றும் கூறப்பட்டது. பண்டாராவைப் பற்றிய 'மென்குரல்' செய்திகள் வாசிக்கப்பட்டன. அதன் பின், ஓர் ஒளி-ஒலிக்காட்சி காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி சத்சங்கத்துடன் நிறைவுபெற்றது.






## இளைஞர் நிகழ்ச்சி, நாசிக், மகாராஷ்டிரா

மார்ச் 24 அன்று, நாசிக் பீரங்கிப் படைப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி லெப்டினன்ட் கர்னல் சுதிர் பராஷர் அவர்களால் நடத்தப்பட்ட "தலைமைப்பண்பு" பற்றிய நிகழ்ச்சியில், சுமார் 25 பேர் பங்கேற்றனர். ஒவ்வொருவரும், தலைவராக இருப்பதைப் பற்றியும், உண்மையான தலைமைப் பண்புகளைப் பெற்றிருப்பது குறித்தும் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்தினர். ஒரு உண்மையான, செயல் ஊக்கம் நிறைந்த தலைவர், ஒரு சிறந்த உதாரணமாக இருந்து வழிநடத்துகிறார் என்று விளக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இராணுவ தலைமைப் பண்பில் இருந்து, ஒருவர் பெறும் படிப்பினைகள் பற்றிய கருத்துரை வழங்கப்பட்டது.

அமைதி, ஒத்திசைவு, ஒருங்கிணைந்து வாழ்வது ஆகியவற்றை உலக சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டும் ஒளி விளக்காக, சகஜ மார்க்க இளைஞர்கள் திகழ வேண்டும் என்பதை மாஸ்டர் எவ்வாறு விரும்புகிறார் என்பது வெளிக்கொணரப்பட்டது. ஊக்கமளிக்கும் துண்டுச் செய்திகளும், நிஜ வாழ்வின் உதாரணங்களும், நீங்காத பதிவுகளை விட்டுச் சென்றன. ஒரு தலைவர் என்பவர், பாதையைக் காண்பிப்பது மட்டுமில்லாமல், அந்த வழியில் நடந்து, முடிவில் தானே அந்த வழியாகவும் ஆகிறார் என்ற மாஸ்டரது வார்த்தைகளை, இளைஞர்கள் நினைவு கூர்ந்தனர். அவர்கள் அனைவரும், மாஸ்டரது எதிர்பார்ப்பிற்குத் தகுந்தபடி வாழ்வது என்றும் உறுதி கொண்டனர்.

## இளைஞர் நிகழ்ச்சி, மேற்கு வங்காளம்

மார்ச் 17 அன்று சுமார் 15 அப்யாசிகள் பங்கேற்ற ஒரு இளைஞர் நிகழ்ச்சியை, கொல்கத்தா மையம் ஏற்பாடு செய்திருந்தது. பங்கேற்பாளர்களின் அறிமுகத்திற்குப்பின், நிகழ்ச்சியின் நோக்கங்கள் குறித்துக் கூறப்பட்டது. பின்னர், "வாழ்க்கையின் தேவைகள் மற்றும் விருப்பங்கள்" குறித்து மாஸ்டரது உரையின் அச்சுப்பிரதிகள் வழங்கப்பட்டன. மாஸ்டரது உரையின் மூலம் புரிந்து கொண்டவற்றை பகிர்ந்து கொள்ளுமாறு அவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

தேவைகளுக்கும், விருப்பங்களுக்குமான வேறுபாடு, தேவையின் வகைகளான, உடற்தேவை, உணர்வுத்தேவை மற்றும் மனத்தேவை, ஒவ்வொருவரும் எவ்வாறு தேவையில் இருந்து விருப்பங்களுக்கு இழுத்துச் செல்லப்படுகின்றனர் மற்றும் கடவுளுடன் தொடர்பு கொள்வதன் மூலம், சகஜ மார்க்கம் எவ்வாறு தேவையைப் பூர்த்தி செய்கிறது போன்றவையே இந்தக் கலந்துரையாடலின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

## இல்லக்கூட்டம், கௌகாத்தி, அஸ்ஸாம்

கௌகாத்தியில் 37 இளம் அப்யாசிகள் ஒரு அப்யாசியின் வீட்டில் ஒன்று கூடினர். சத்சங்கத்திற்குப் பிறகு, கௌகாத்தியில் உள்ள தன்னார்வ வேலைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. 2012ம் ஆண்டின் கட்டுரை நிகழ்வு குறித்து பரிசீலனை செய்யப்பட்டது. வரும் கட்டுரை நிகழ்வில், கல்வி நிறுவனங்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கத் தேவையான வழிமுறைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. ஆசிரமத்தைத் திறம்பட உபயோகிக்கும்வகையில், ஒவ்வொரு மாதமும், வரவேற்புக்கூட்டங்களும், புதிய அப்யாசிகளுக்கு விளக்கம் அளிக்கும் நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

நமது சொந்த பரிணாம வளர்ச்சிக்காக, மாஸ்டரது வேலையில் பங்கெடுத்துக் கொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. அவ்வாறு பணியாற்றும் போது, நமது ஆன்மீக யாத்திரைக்கு மிகவும் முக்கியமான, சகிப்புத்தன்மை, சகோதரத்துவம், கீழ்ப்படிதல்



போன்றவற்றை, அவரது நிலையான நினைவின் மூலம் நம்மையறியாமலேயே செய்வதற்குக் கற்றுக்கொள்ள முடியும். இந்த கூட்டமானது, அப்யாசிகளிடத்தில் ஒரு உறுதியான சகோதரத்துவ உணர்வினை வளர்க்க தவியது.

## இளைஞர் சந்திப்பு கூட்டம், பில்வாரா,ராஜஸ்தான்



"இலட்சியம்" என்ற தலைப்பில் மார்ச் 24 அன்று நடைபெற்ற இளைஞர் சந்திப்பில், 16 அப்யாசிகள் பங்கேற்றனர். மனித வாழ்வின் இலட்சியம், ஆன்மீகப் பயிற்சியில் குருவின் முக்கியத்துவம், தியானம் மற்றும் சுத்திகரிப்பின் தேவை, இரவு நேரப் பிரார்த்தனையின் முக்கியத்துவம் மற்றும் நிலையான நினைவு போன்றவை குறித்த கலந்துரையாடலை எளிமைப்படுத்த, கேள்வி பதில் பகுதி இருந்தது. "சகஜ் மார்க் கே மூல் தத்வ" என்ற புத்தகத்தில் இருந்து சில பகுதிகள் வாசிக்கப்பட்டன. ஒருவரது புரிந்து கொள்ளுதலுக்கும், உண்மையில் அது என்னவாக உள்ளது என்பதற்கும் உள்ள இடைவெளியை இணைப்பதுதான், இந்த கலந்துரையாடலின் முக்கிய நோக்கம் ஆகும்.

மார்ச், கடைசி ஞாயிற்றுக்கிழமை அன்று, தியானத்திற்குப்பின், இளைஞர் கூட்டம் ஒன்று நடைபெற்றது. 13 அப்யாசிகள் பங்கேற்ற இக்கூட்டத்தில், மிஷன் நிகழ்வுகளில் இளைஞர்கள் பங்கேற்பதை அதிகப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது. ஒவ்வொரு ஞாயிறும் சத்சங்கம் முடிந்த பிறகு, அனைவரும் சிறிது நேரம் தங்கிச் செல்வது என்றும், முறையாக வருகை புரியாத அப்யாசிகளை, அவர்களை சகஜ மார்க்கத்திற்கு யார் அறிமுகப்படுத்தினார்களோ அவர்களின் உதவி கொண்டு சந்திக்கவும் திட்டமிடப்பட்டது. இது, அப்யாசிகள் தங்கள் பயிற்சியில் உள்ள குறைகளை இனங்கண்டு, மீண்டும் உற்சாகத்துடன் தொடர உதவி புரியும்.

## புதிய வெளியீடுகள்




ஹார்ட் ஸ்பீக் 2010
தெலுங்கு
தமிழ்
மராத்தி
மலையாளம்
கன்னடம்
ஹிந்தி
குஜராத்தி


## அறிவிப்புகள்

**சகோதரி ஜனனி சுப்பிரமணியன்**
மேலாளர் -மனித வள மேம்பாடு,
மிஷன் தலைமையகம்.

**சகோ. இந்துசேகரன் V. பிள்ளை**
மையப் பொறுப்பாளர், திருவனந்தபுரம் மையம்



விஸ்பர்ஸ் ஃப்ரம் த ப்ரைட்டர் வர்ல்ட்
ஐந்தாம் பாகம்



மை மாஸ்டர்
தமிழ், ஹிந்தி



ரோல் ஆ~ஃப் மாஸ்டர் இன் ஹ்யூமன் எவல்யூஷன்
மராத்தி, கன்னடம், மலையாளம்





ஹார்ட்ஸ்பீக் 2012
ஆங்கிலம்




ஹார்ட்ஸ்பீக் 2008
கன்னடம்




டெளன் மெமொரி லேன்
பாகம் 1 தெலுங்கு





கம்ப்ளீட் வொர்க்ஸ் ஆ~ஃப் ராம் சந்த்ரா
(லாலாஜி மகராஜ்) பாகம் 2
ஆங்கிலம்





த ஸ்பைடர்ஸ் வெப்- பாகம் 2
ஆங்கிலம்





ப்ரொஸீடிங்ஸ் ஆ~ஃப் த ~ஃபர்ஸ்ட் க்ரெஸ்ட் செமினார்
ஆங்கிலம்




ரோல் ஆ~ஃப் மாஸ்டர் இன் ஹ்யூமன் எவல்யூஷன்
MP3 ஆங்கிலம்





கால் ஆ~ஃப் த டிவைன்
DVD- ஆங்கிலம்





லை~ஃப் ஆ~ஃப் பாபூஜி
DVD- ஹிந்தி





ஜர்னி இன்டு த ஹார்ட்
DVD- ஆங்கிலம்





ஹார்ட் ஸ்பீக் 2011
DVD- ஆங்கிலம்





த ஹார்ட் ஆ~ஃப் லவ்
DVD- ஆங்கிலம்





சத்கோல்- ஹெவன் ஆன் எர்த்
DVD- ஆங்கிலம்





மொமென்ட்ஸ் வித் த பிலவட்
DVD-ஆங்கிலம்




மெசேஜ் ஆ~ஃப் த ஹார்ட்
DVD- ஆங்கிலம்




லவ் அண்ட் டெத்
MP3 - ஆங்கிலம்




மை மாஸ்டர்
MP3- ஆங்கிலம், ஹிந்தி, தமிழ்




ஹார்ட் ஸ்பீக் 2007
MP3 - ஆங்கிலம்

## அமலாபுரம் ஆசிரமம், ஆந்திரபிரதேசம்

## ஒளி மையம்



அமலாபுரம், ஒரு நடுத்தரமான நகரம். இது ஆந்திரபிரதேசத்திலுள்ள ராஜமுந்திரி நகரத்திலிருந்து 60 கி.மீ தொலைவில், கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ளது. காக்கிநாடா மற்றும் ராஜமுந்திரி என இரு நகரங்களை இணைக்கக்கூடியதாக அமலாபுரம் இருக்கின்றது. இந்தியாவிலுள்ள பழமையான ஆசிரமங்களில் இதுவும் ஒன்று. இது ஆந்திரபிரதேசத்தில் கட்டப்பட்ட மூன்றாவது ஆசிரமம் ஆகும். 40 வருடங்களுக்கும் மேலாக இது ஆன்மீக மையமாக இருந்து வருகிறது. இந்த மையமானது 1971ம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்தது. 1969ம் ஆண்டில் மிஷனில் சேர்ந்த அப்யாசி பி.பி.ராமுடு அவர்களின் முயற்சியால் 1971ம் ஆண்டில் இம்மையம் உருவானது. இவர் தன்னுடைய நண்பர் டாக்டர் அப்பாரி ராமகிருஷ்ணாவை அப்யாசியாக அறிமுகப்படுத்தினார். இவர் தான் அம்மையத்தின் முதல் பிரபெக்ட் ஆனார். வாராந்திர சத்சங்கமானது அவர் வீட்டில்தான் நடந்து வந்தது. அந்த சத்சங்கங்களில் 15-20 அப்யாசிகள் கலந்துகொண்டனர். அவர் அமலாபுரம் நகராட்சியிலிருந்து 484 ச.கஜம் நிலத்தை வாங்கி, ஆசிரமம் கட்டும் எண்ணத்தை தெரிவித்தார். பாபூஜி மகராஜிடம் அனுமதி பெற்ற பிறகு, அப்யாசிகளால் பெருமளவில் வழங்கப்பட்ட நன்கொடையால் அந்த இடம் வாங்கப்பட்டது. அந்த நிலமானது அரசு பேருந்து அடுக்ககத்திலிருந்து 1 கி.மீ தொலைவில் உள்ளது.

சிறிது காலத்திற்குப் பிறகு, 1982 மார்ச் 10-ம் நாளன்று மையப் பொறுப்பாளர் ஸ்ரீ வி.பி.டி.நாகேஸ்வர் அவர்களால் ஆசிரம கட்டிடங்கள் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. 18 மாதங்களில் கட்டிட கட்டுமான பணிகள் நிறைவடைந்தன. பாபூஜி மகராஜ் அவர்களிடமிருந்து, ஆசிரமம் திறக்கப்பட்டு, உபயோகப்படுத்த தயார்நிலையில் உள்ளது என்ற செய்தி கிடைக்கப்பட்ட பின்னர், அப்யாசிகள் அந்த இடத்தினை தியானத்திற்காக பயன்படுத்தத் துவங்கினர். பின்னால், சகோதரி கஸ்தூரி அங்கு வருகை புரிந்த போது, அவர்களால் ஆசிரமம் முறைப்படி தொடங்கி வைக்க ப்பட்டது.

9 அடி நடைமேடை உட்பட தியானக்கூடத்தின் அளவானது 22*32 அடியாக இருக்கிறது. நான்கு மூலைகளிலும், நான்கு கதவுகளைக் கொண்டும், இரண்டு அறைகளைக் கொண்ட முதல் தளத்தையும் பெற்றிருக்கிறது. தற்பொழுது அந்த இரண்டு அறைகளும் குழந்தைகளின் மையம், நூலகம் மற்றும் ஆசிரம அலுவலகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மாஸ்டரின் அனுமதியுடனும், மண்டல பொறுப்பாளர் சகோ. மது கொத்தப்பள்ளி அவர்களின் ஒத்துழைப்புடனும், 2010-2011ல் ஆசிரமத்தின் கட்டிடங்கள் புதுப்பிக்கப்பட்டு, சமையலறையும், கழிவறைகளும் கூடுதலாக கட்டப்பட்டன. ஞாயிறு சத்சங்கங்களில் சுமார் 80 அப்யாசிகள் கலந்து கொள்கின்றனர். மாதத்தின் ஒவ்வொரு இரண்டாவது ஞாயிற்றுக் கிழமைகளிலும் இங்கு முழுநாள் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்த மையத்தில் இரண்டு பிரிபெக்ட்கள் இருக்கிறார்கள்.

இந்த ஆசிரமத்தின் அருகில், ரசோல், ஜகன்னபேட்டா, நரசபூர் மற்றும் யானம் போன்ற துணை மையங்கள் உள்ளன. மாஸ்டர் தன்னுடைய மனைவி சகோதரி சுலோச்சனாவுடன், ஏப்ரல் 16, 1986 அன்று இம்மையத்திற்கு வருகை புரிந்து இரண்டு நாள் தங்கினார்.






To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2013 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.